- ❖ ‘‘ஹெல அஹறின் சுவய ரகிமு’’ எனும் உள்நாட்டு உணவு வகைகளை பிரபலப்படுத்தும் பிரயோக செயலமர்வுகள் இதன் கீழ் நடத்தப்படுகின்றன. விசேடமாக அந்த நாட்களில் ஹெல மக்கள் பயன்படுத்திய தொற்றாத நோய் கட்டுப்பாட்டு முறைகளான வேகவைத்த குழம்பு போன்றவற்றை தற்போதைய சமூகத்திற்கு அறிமுகப்படுத்துவதே இதன் நோக்கமாக உள்ளதுடன் இங்கு முந்தைய மற்றும் பிந்திய விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு அளவிடப்படுகிறது.
- ❖ சமூக சுகாதார மேம்பாட்டு சேவை ஊடகம் மற்றும் கலாச்சார பிரிவின் வீதி நாடகக் குழுவால் விசேடமாக ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்கும் தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும். தெரு நாடக நிகழ்ச்சிகளை நடாத்தி விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டன. இந்த திட்டத்தின் மூலம் சுகாதார செய்திகள் வழங்கப்படுவதுடன் வண்ண அட்டை முறைகள் மூலம் முன்னேற்றம் அடையப்படுகிறது. விநியோகிக்கப்பட்ட 2,106 துண்டுப்பிரசுரங்களில் 79 % பேர் சேவையில் திருப்தி அடைந்துள்ளனர்.

### 2.10.2 ஆராய்ச்சி மற்றும் ஏனைய சேவைகள்

- ❖ 1. ஆயுள்வேதம் பற்றிய அறிவை மதிப்பீடு செய்தல் – இலங்கையில் கிராமப்புற சமூகத்தினரிடையே ஆயுள்வேதத்தால் ஈர்க்கப்பட்ட சமையல் நடைமுறைகள்: முன்னைய மற்றும் பிந்திய ஆய்வு.

  2. பாலர் பள்ளித் தாய்மார்களிடையே ஆயுள்வேத ஊட்டச்சத்து எண்ணக்கரு பற்றிய அறிவை மதிப்பீடு செய்தல்: ஆய்வுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பகுப்பாய்வு.

  3. இலங்கையில் அனுராதபுரம் மாவட்டத்தில் லீஷ்மேனியாசிஸ் விழிப்புணர்வு: நோய்க்காரணி மருத்துவ அம்சங்கள் மற்றும் தடுப்பு குறித்த ஆய்வு.

  ஆகிய தலைப்புக்களின் கீழ் 2024 டிசம்பரில் இந்தியா உத்தர பிரதேஷ் மானிலத்தின் தெஹராதுன்னில் நடைபெற்ற உலக ஆயுள்வேத மாநாட்டில் ஆராய்ச்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

- ❖ மேலும், ரஜரட்ட மருத்துவ பீடத்தின் மருத்துவ நெறிமுறைகள் குழுவின் அனுமதியின் கீழ் எம்மால் நீரிழிவு நோய் குறித்த ஆராய்ச்சிக் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. (நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான பாரம்பரிய மற்றும் நிரப்பு மருத்துவத்தின் பயன்பாடு மற்றும் தடைகள்: அனுராதபுரம் மாவட்டத்தில் ஒரு விளக்கமான சமூக அடிப்படையிலான ஆய்வு)

- ➢ மேலும், ரஜரட்ட மருத்துவ பீடத்தின் ECLIPSE கருத்திட்டத்தின் ஆதரவுடன், மணல் பூச்சிகளைத் தடுப்பதற்கான சமூக அடிப்படையிலான விழிப்புணர்வு பிரச்சாரத்தின் கீழ் 12,171 பேருக்கு விழிப்புணர்வூட்டப்பட்டு கையேடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. நோய்க்கான காரணம், நோய் அறிகுறிகள் மற்றும் நோய்த் தடுப்பு தொடர்பான முமன்னனைய மற்றும் பிந்திய முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது.

- ❖ மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான ஆராய்ச்சி மற்றும் போசாக்கு தொடர்பான 03 செயலமர்வுகள் மற்றும் சமூக சுகாதார மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தொற்றா நோய்க் கட்டுப்பாடு தொடர்பான ஒரு செயலமர்வு நடாத்தப்பட்டது.

மேலும், சுதேச மருத்துவ முறைகள் பற்றிய தேசிய நிறுவனம் கம்பஹா மாவட்டம் மற்றும் அனுராதபுரம் சமூக சுகாதாரம் ஆகிய இணைந்து முதியோர் பராமரிப்பு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் தற்போது எம்மால் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருகிறது. நாங்கள் தற்போது ஹிதி சத்காரா ஆராய்ச்சி திட்டத்தைத் தொடர்கிறோம். இதன் போது முதல் கட்டத்தில், 1,800 பெரியவர்களை இலக்காகக் கொண்ட ஆரம்ப கணக்கெடுப்பு நிறைவடைந்துள்ளதுடன் மருத்துவ அதிகாரிகளுக்கு ஒரு மாத கால பயிற்சியும், சமூக சுகாதார மேம்பாட்டு அதிகாரிகளுக்கு 5 நாள் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன. தற்போது, 1,800 பெரியவர்களை இலக்காகக் கொண்ட பெரியவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சி சிகிச்சைகள் (யோகா மற்றும் எண்ணெய் மசாஜ் உட்பட) சமூக மட்டத்தில் நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக 13 மருத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் 4,056 பேர் பயனடைந்துள்ளனர்.

### 2.11 எதிர்கால இலக்குகள் மற்றும் சவால்கள்

### 2.10.1 இலக்குகள்

1. தேசிய சுகாதார முறைமையில் கூடுதல் பங்களிப்பினை வழங்குவதற்காக ஆயுள்வேத வைத்தியசாலை முறைமையை தர ரீதியாகவும் அளவு ரீதியாகவும் அபிவிருத்தி செய்தல்
2. வருமான உருவாக்கத்திற்காக சுதேச வைத்திய தொழில்முயற்சி அபிவிருத்தியை விரிவாக்குதல்
3. சுதேச வைத்திய துறை தொடர்பான ஏற்றுமதிக்கான வசதிகளை விரிவுபடுத்தல்.
4. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துகளை இந்த நாட்டில் பயிரிடுவதன் மூலம் மருந்துப் பொருள் சந்தையை விரிவுபடுத்தல்.
5. முதியோர் சுகாதார மேம்பாட்டுக்கான முறையியல் ஒன்றை தயாரித்தல்.
6. கிராமிய மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
7. சர்வதேச தரத்திலான மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளை நடாத்துதல்.
8. ஆயுள்வேத பாதுகாப்பு சபையுடன் இணைந்து தேன் உற்பத்திக் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.
9. பாரம்பரிய வைத்திய முறைகள் உள்ளடங்கிய சர்வதேச வைத்திய வலயம் ஒன்றை உருவாக்குதல்.
10. சுதேச மருந்து உற்பத்தி ஏற்றுமதி செய்வதை ஊக்குவித்தல்.

### 2.10.2 சவால்

1. தேசிய சுகாதார முறைமையில் சுதேச வைத்திய துறை மூலம் நிறைவேற்றப்படும் கடமைப் பொறுப்பு பிரதிபலிக்காமை.
2. வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீட்டின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள இலக்கினை அடைந்து கொள்வதில் உள்ள சிரமம்.
3. மனித வள மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை.

# 3. அத்தியாயம்

## 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் யெலாற்றுகை

### 3.1 நிதிச் யெலாற்றுகை கூற்று

ஏசீஏ-எப்

**2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலற்றுகை அறிக்கை**

| திருத்திய வரவு செலவு ஒதுக்கீடு 2024 | | குறிப்பு | உண்மை 2024 | உண்மை 2023 | |
|---|---|---|---|---|---|
| ரூ. | | | ரூ. | ரூ. | |
| | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| | வருமான வரி | 1 | - | - | |
| | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஎ-1 |
| | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | |
| | வரியல்லாத வருமானங்களும் மற்றும் ஏனையவையும் | 4 | | - | |
| | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | | - | |
| | வருமானமல்லாத பெறுகைகள் | | | - | |
| | திறைசேரிக் கட்டுநிதி | | 2,214,744,456 | 1,822,586,.048 | ஏசீஎ-3 |
| | வைப்புக்கள் | | 231,671,500 | 11,965,626 | ஏசீஎ-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 40,060,540 | 38,686,671 | ஏசீஎ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு பெறுகைகள் | | | | |
| | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)** | | **2,486,476,496** | **1,873,238,345** | |
| | **மொத்த வருமானப் பெறுகைகளும் மற்றும் வருமானமல்லாத பெறுகைகளும் (இ)= (அ)+(ஆ)** | | **2,486,476,496** | **1,873,238,345** | |
| | **திறைசேரி மாற்றல்கள் (ஈ)** | | 152,895,178 | | |
| | **தேறிய வருமானப் பெறுகைகளும் மற்றும் வருமானமல்லாத பெறுகைகளும் (உ)= (இ)+(ஈ)** | | **2,333,581,318** | **1,873,238,345** | |
| | கழி: செலவு | | | | |
| | **மீண்டுவரும் செலவினங்கள்** | | | | |
| 1,917,968,600 | ஊதியங்கள், சம்பளம் மற்றும் பிற ஊழியர் பயன்கள் | 5 | 1,886,427,151 | 1,509,647,546 | |
| 600,172,400 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 562,344,396 | 422,328,411 | ஏசீஎ-2(ii) |
| 7,554,000 | நிவாரண உதவி, மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 7 | 5,525,465 | 10,924,552 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | | |
| - | பிற மீண்டுவரும் செலவினங்கள் | 9 | | | |
| **2,525,695,000** | **மொத்த மீண்டுவரும் செலவினங்கள் (ஈ)** | | **2,454,297,012** | **1,942,897,509** | |
| | மூலதனச் செலவு | | | | |
| 109,500,000 | மூலதனச் சொத்துக்களினைப் புனரமைப்பதும் மற்றும் மேம்படுத்துவதும் | 10 | 100,577,815 | 44,533,653 | |
| 469,500,000 | மூலதனச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல் | 11 | 112,245,240 | 220,000 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | 831,802 | ஏசீஎ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களினைக் கையகப்படுத்துதல் | 13 | - | - | |
| 4,000,000 | திறன் விருத்தி | 14 | 2,842,580 | 2,114,204 | |
| 120,000,000 | பிற மூலதனச் செலவுகள் | 15 | 11,514,267 | 3,027,423 | |
| **703,000,000** | **மொத்த மூலதனச் செலவு (உ)** | | **227,179,902** | **50,727,082** | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 20,412,046 | 9,008,298 | ஏசீஎ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 51,076,345 | 28,466,439 | ஏசீஎ-5 |
| | **ஏனைய மூலதன பேரேட்டுக் கணக்கு கொடுப்பனவுகள்** | | | | |
| | மூலதன பேரேட்டுச் செலவு ஊ | | **71,488,391** | **37,474,737** | |
| **3,228,695,000** | மொத்தச் செலவினம் (எ) = (ஈ + உ+ஊ) | | 2,752,965,305 | 2,031,099,329 | |
| **-** | டிசம்பர் 31 இல் மீதி (ஏ) = (ஈ + உ + ஊ) | | (419,383,987) | (157,860,985) | |
| | கட்டுநிதி இணக்க கூற்றின் பிரகாரம் மீதி | | (420,937,456) | (157,860,985) | ஏசீஎ-7 |
| - | டிசம்பர் 31 இல் கட்டுநிதி மீதி | | 1,553,469 | | ஏசீஎ-3 |
| | | | (419,383,987) | (157,,860,985) | |

## 3.2 நிதி நிலைமைக் கூற்று

**2024 டிசம்பர் 31 இல்**
**நிதி நிலைமைக் கூற்று**

**ஏசீஏ-பி**

| | குறிப்பு | உண்மை | |
|---|---|---|---|
| | | **2,024** | **2,023** |
| **நிதியல்லாத சொத்துக்கள்** | | **ரூ.** | **ரூ.** |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ 6 | 5,192,850,157 | 5,036,588,467 |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5(ஏ) | 108,960,672 | 97,944,867 |
| காசும் மற்றும் காசுச் சமன்பாடும் | ஏசீஏ 3 | 1,553,469 | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **5,303,364,298** | **5,134,533,334** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கான தேறிய சொத்து | | (110,758,984) | 89,484,664 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | | 5,192,850,157 | 5,036588,467 |
| வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கு | ஏசீஏ 5(பீ) | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ 4 | 219,719,656 | 8,460,203 |
| கட்டுநிதி மீதி | ஏசீஏ 3 | 1,553,469 | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **5,303,364,298** | **5,134,533,334** |

பக்க இலக்கம் 1 தொடக்கம் 57 வரை காட்டும் மேற்குறிப்பிட்ட ஏசீஏ 1 தொடக்கம் 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 58 தொடக்கம் 97 வரை உள்ளடங்கியுள்ள கணக்குக் குறிப்புகளின் விவரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் அரசாங்க நிதி ஒழுங்கு விதிகள் 150, 151 மற்றும் 2024.12.16 ஆம் திகதிய அரசாங்க கணக்கு வழிகாட்டி இலக்கம் 06/2024 ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய கணக்குகத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகிறோம்.

நிதிக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று அறிக்கையிடல் நிறுவனத்தில் காணப்படுகிறது என்பதையும் நிதிக் கட்டுப்பாட்டுக்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்கும் அதன்படி அந்த முறைமைகளை பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கு அவ்வப்போது மீளாய்வு மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகிறோம்.

| ........................................ | .................................... | ................................ |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் |
| பெயர்: வைத்தியர் அனில் ஜாசிங்க | பெயர்:வைத்தியர் எம்.ஓ.ஜே.அபேகுணவர்தன | பணிப்பாளர்(நிதி /ஆணையாளர் (நிதி) |
| பதவி: செயலாளர், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | பதவி:ஆயுள்வேத ஆணையாளர் நாயகம் ஆயுள்வேத திணைக்களம் | பெயர் : ஏ.எம்.எம்.கே.அபேசிங்க |
| திகதி:2025.02.22 | திகதி:2025.02.20 | திகதி:2025.02.20 |

## 3.3 நிதிப்பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ - சீ

**2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப் பாய்ச்சல் கூற்று**

| | 2024 ரூ. | 2023 ரூ. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | | |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | | |
| இலாபம் | | |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | | |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 111,687,186 | 85,596,727 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 2,214,744,456 | 1,822,586,048 |
| முற்பணங்களை அறவிடல் | 34,065,289 | 31,270,224 |
| வைப்புக்களின் பெறுகை | 231,671,500 | 11,965,626 |
| செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (அ) | **2,592,168,431** | **1,951,418,625** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 2,271,118,326 | 1,785,604,263 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 4,721,936 | 10,713,342 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 8,679,692 | 107,705,942 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 152,895,178 | |
| முற்பணக் கொடுப்பனவு | 51,239,876 | 28,160,207 |
| வைப்புக் கொடுப்பனவு | 20,412,046 | 9,008,298 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **2,509,067,054** | **1,941,192,052** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **83,101,377** | **10,226,573** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | | |
| பங்கு இலாபம் | | |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | | |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | | |
| முற்பண அறவீடுகள் | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 81,547,908 | 10,226,573 |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ) | **81,547,908** | **10,226,573** |
| முற்பண செலுத்துகைகள் | | |
| முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ) | **(81,547,908** | **(10,226,573)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **1,553,469** | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | | |
| வெளிநாட்டுக் கடன்கள் | | |
| பெற்ற நன்கொடைகள் | | |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | | |
| **கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | | |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | | |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | | |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் (ஏ)=(உ) +(எ)** | | |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **1,553,469** | - |
| ஜனவரி 01 இல் ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31 இல் இறுதிக் காசு மீதி | **1,553,469** | - |

**3.4. நிதிக் கூற்றுக்களின் குறிப்பு - இல்லை.**

**3.5 வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை**

**ரூ.000**

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | அளவு (ரூ.) | இறுதி வருமான மதிப்பீட்டின் % சதவீதமாக |
| 2002.01.01 | அரச கட்டடம் மற்றும் கட்டட வாடகை | 1,100,000.00 | 2,000,000.00 | 3,928,583.50 | 196% |
| 2002.02.99 | வட்டி | 7,000,000.00 | 3,000,000.00 | 3,310,950.35 | 110% |
| 2003.99.00 | ஏனைய வருமானம் | 17,500,000.00 | 17,500,000.00 | 39,970,112.13 | 228% |
| 2006.02.02 | நிதியல்லாத சொத்து விற்பனை வருமானம் | 30,000.00 | 90,000.00 | 86,412.00 | 96% |

**3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டு செயலாற்றுகை**

**ரூ.000**

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மைச் செலவினம் | பயன்படுத்தப்படும் ஒதுக்கீட்டின் முடிவுறுத்தப்பட்ட ஒதுக்கீட்டு அளவின் % சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 2,205,000,000.00 | 2,525,695,000.00 | 2,454,297,012.00 | 97% |
| மூலதன | 700,000,000.00 | 703,000,000.00 | 227,179,902.00 | 32% |

**3.7 நி.பி.208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு**

**ரூ. 000**

| தொ. இல. | ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு/ திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மைச் செலவினம் | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 01 | 020-1-1-7-1409(11) | 2024 செப்டம்பர் மாதம் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின் தேர்தல் கடமைகளில் பங்கேற்ற அலுவலர்களுக்கான கொடுப்பனவு | 1,171,841,85 | 1,171,841,85 | 1,171,841,85 | 100% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 02 | 111-2-26-14-2509(13) | உலக சுகாதார நிறுவனம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக | 3,306,750.97 | 3,306,750.97 | 3,306,750.97 | 100% |
| 03 | 111-2-26-2-1409(11) | ஆயுள்வேத சமூக சுகாதார மேம்பாட்டு சேவைப் பணிகள் | 3,369,500.00 | 3,369,500.00 | 1,642,467.27 | 48.75% |

## 3.8 நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடல் செயலாற்றுகை

**ரூ. 000**

| சொத்து குறியீடு | குறியீட்டு விபரம் | 2024.12.31 இல் பொருட் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் மீதி | 2024.12.31 இல் நிதி நிலைமை அறிக்கை பிரகாரம் மீதி | எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்படவுள்ள | முன்னேற்றத்தை % சதவீதமாக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடம் மற்றும் கட்டமைப்புகள் | 2,287,707,621.66 | 2,287,707,621.06 | - | 100% |
| 9152 | பொறித்தொகுதி | 499,615,035.34 | 499,615,035.62 | - | 100% |
| 9153 | காணி | 2,405,527,500.00 | 2,405,527,500.00 | (மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர்) ஹம்பாந்தோட்டை சமல் ராஜபக்ஷ வைத்தியசாலை காணி மற்றும் திருகோணமலை கோனேஷ்புரி சித்த போதனா வைத்தியசாலைக் காணி | 100% |
| 9160 | WIP (நடைமுறை | - | | - | - |

## 3.9 கணக்காய்வாளர் அறிக்கை

ஆயுள்வேத ஆணையாளர் நாயகம்
ஆயுள்வேத திணைக்களம்

ஆயுள்வேத திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

### 1. நிதிக் கூற்றுக்கள்

---------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------

தலைப்பு 220 – ஆயுள்வேத திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31ல் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுள்வேத திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2024 டிசம்பர் 31ல் உள்ளவாறான ஆயுள்வேத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும்

பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஒரு விடயத்தை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படையை விவரிக்கும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பக்க இலக்கம் 05 மீது கவனம் செலுத்துகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 ஆம் டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கு வழிகாட்டி இலக்கம் 06/2024 பிரகாரம் ஆயுள்வேத திணைக்களம், திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்காக பொருத்தமற்றதாக அமையலாம். எனது அறிக்கையானது ஆயுள்வேத திணைக்களம், திறைசேரி மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் பயன்பாட்டை மாத்திரம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 ஆம் டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கு வழிகாட்டி இலக்கம் 06/2024 பிரகாரம் உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)இ பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்காக பயனுள்ள உள்ளகக் கட்டப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிசெய்ய வேண்டும் என்பதுடன் அந்த முறைமையின் உற்பத்திதிறன் தொடர்பில் காலத்தக்கு காலம் மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய

மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவூட்டப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.3 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் சட்ட ரீதியான உரிமையை கையகப்படுத்திய 04 காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்குகளில் பதியப்படவில்லை. மேலும், சிகாஸ்

கணணி அச்சுக் குறிப்பின் பிரகாரம் கம்பஹ விக்ரமாரச்சி ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் காணியின் பெறுமதியான ரூ.53,000,000 தொகை இரண்டு தடவைகள் பதியப்பட்ட காரணத்தால் காணிகளின் பெறுமதி அத்தொகையால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்துக்குச் சொந்தமான ரூ.20,980,575 கிரயமுள்ள 09 உபகரணங்கள் 2024 ஆம் ஆண்டு இலங்கை ஆயுள்வேத மருந்து கூட்டுத்தாபனத்துக்கு ஒப்படைத்த போதும் அந்த சொத்துக்களின் கிரயத்தில் இருந்து ரூ.16,997,333 மாத்திரம் நிதியல்லா சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(இ) திணைக்களத்துக்கு உரித்தாகாத 09 காணிகளில் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் 31 கட்டடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) ஓட்ட நிலைமையில் காணப்படாத 02 கெப் வண்டிகள், ஒரு பஸ் வண்டி மற்றும் 04 மோட்டார் சைக்கில்களை அகற்றும் பணிகள் 2022 பெப்ரவரி 14 ஆம் திகதி சுகாதார அமைச்சுக்கு ஒப்படைத்த போதும் அந்த சொத்துக்களின் கிரயம் இனங்காணப்பட்டு நிதியல்லாத சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) குத்தகை தவணைக் கொடுப்பனவு முறையின் கீழ் 2012 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூ.8,400,000 கிரயமுள்ள வேன் வண்டி குத்தகை காலப்பிரிவின் பின்னர் திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டு கையேற்கப்பட்ட போதும் அந்த வாகனத்தின் கிரயம் நிதியல்லாத சொத்தாக மீளாய்வு ஆண்டில் கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.6.2 கணக்காய்வுக்கான சாட்சியங்கள் இல்லாமை

(அ) மீளாய்வாண்டு டிசம்பர் 31 இல் மொத்தம் ரூ.5,036,588,467 பெறுமதியான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட் கணிப்பீட்டு சபையின் அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) திணைக்களத்துக்குச் சொந்தமான ரூ.93,944,999 பெறுமதியான வாகனங்கள் காணப்படுவதாக நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட போதும் சிகாஸ் கணணி முறைமையில் ஒவ்வொரு வாகனம் தொடர்பாகவும் விவரமான தகவல்கள் குறிப்பிடப்பாத காரணத்தால் திணைக்களத்துக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களினதும் கிரயம் நிதிக் கூற்றுக்களில் பிரதிபலிப்பதாக உறுதி செய்வதற்கு முடியவில்லை.

### 1.6.3 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் பின்வரும் ஆவணங்கள் பேணப்படவில்லை என்பதுடன் ஒருசில ஆவணங்கள் முறையாக இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை என்பது மாதிரி கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| ஆவணங்கள் மற்றும் புத்தகக வகை | ஏற்புடைய ஒழுங்குவிதி | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) சேதம் மற்றும் நட்டங்கள் ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 110 | இற்றைப்படுத்தப்படவில்லை |
| (ஆ) பொறுப்புக்கள் பற்றிய ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 214 | பேணப்படவில்லை |
| (இ) காசோலைகள் ஒப்படைக்கும் ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 260, 388 | இற்றைப்படுத்தி பேணப்படவில்லை |

| | | |
|---|---|---|
| (ஈ) பிணைகள் வைப்பு ஆவணம் | நிதி ஒழுங்குவிதி 891(1) | இற்றைப்படுத்தி பேணப்படவில்லை |
| (உ) வாகன லொக் புத்தகம் | நிதி ஒழுங்குவிதி 1645(அ) | இற்றைப்படுத்தி பேணப்படவில்லை |

## 2. ஏனைய சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கை தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணக்கமாக உள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

| 2023 ஆம் ஆண்டு தலைப்பு – 220 தொடர்பான 154(6) அறிக்கை பந்தியின் தொடர்பு | நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை | இந்த அறிக்கை பந்தியின் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (இ)(vii) | அகற்றுதல் பணிகளை துரிதமாக நிறைவு செய்தல் வேண்டும் என்பதுடன் அந்த சொத்துக்களின் கிரயத்தை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் இருந்து நீக்குவதற்கு மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு மூலம் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1.6.2(ஈ) |
| 1.6.1 (இ)(viii) | நிதியல்லாத சொத்துக்களாக கணக்குகளில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1.4.2(உ) |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் கட்டுநிதித் திட்டத்தின் பிரகாரம் திறைச்சேறியிலிருந்து கோரப்பட்ட கட்டுநிதியின் அளவு ரூ.2,701,111,550 ஆக இருந்த போதும் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகை ரூ.2,214,744,456 ரூபாவாக அமைந்ததனால் கட்டுநிதி முகாமையை திட்டமிட்டவாறு நிறைவேற்றுவதற்கு திணைக்களத்தால் முடியவில்லை

### 2.2 செலவு முகாமைத்துவம்

நிதி ஒழுங்குவிதிகள் 50 இல் கட்டப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் சரியானதும் தர்க்க ரீதியான மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை என பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(அ) 220-1-1-0-1201 ஆம் இலக்க செலவு விடயம் தொடர்பில் ஒதுக்கபப்ட்ட ரூ.4,500,000 தொகை ஆரம்ப ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக ரூ.3,000,000 ஒதுக்கீடு பெற்றுக்கொண்டதுடன் இந்த மேலதிக ஒதுக்கீட்டில் ரூ.2,213,074 அதாவது 73.76 சதவீதம் ஒதுக்கீட்டு மீதி ஏற்பட்டது.

(ஆ) 220-1-1-0-1302 ஆம் இலக்க செலவு விடயம் தொடர்பில் ஒதுக்கப்பட்ட ரூ.1,500,000 ஆரம்ப ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக ரூ.1,400,000 ஒதுக்கீடுகள் மாற்றப்பட்டதுடன் அந்த மேலதிக ஒதுக்கீட்டில் ரூ.917,684 அதாவது 65.54 சதவீதம் ஒதுக்கீட்டு மீதி ஏற்பட்டது.

(இ) 220-2-2-13-2509 ஆம் இலக்க (சுவதா சுற்றுலா பணிகளின் மேம்பாடு) மற்றும் 220-2-5-0-2002 ஆம் இலக்க செலவு விடயம் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட முறையே ரூ.100,000,000 மற்றும் ரூ.100,000 முழு ஒதுக்கீடும் மீதியாக இருந்தது.

(ஈ) 18 மீண்டெழும் செலவு விடயங்கள் மற்றும் 06 மூலதன செலவு விடயங்களுக்காக அங்கீகரின்னக்கட்ட முறையே ரூ.28,623,000 மற்றும் ரூ.472,500,000 தேறிய ஒதுக்கீட்டில் முறையே ரூ.14,530,814 மற்றும் ரூ.366,604,600 ஒதுக்கீட்டு மீதி ஏற்பட்டது. இந்த மீதி தேறிய ஒதுக்கீட்டில் 26.41 சதவீதத்தில் இருந்து 91.45 சதவீத இடைவெளியில் காணப்பட்டது.

### 3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

2025 ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட போதும் 2024 டிசம்பர் மாதத்திற்கான 05 வவுச்சர்களின் பெறுமதியான ரூ.807,844 பொறுப்புக்களாக இனங்காணப்பட்டது.

### 3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுரை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் திணைக்களத்தின் நிதி நிருவாகத்துக்காக பயனுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து பராமரிப்பதாக உறுதி செய்ய வேண்டும் என்பதுடன் அந்த முறைமையின் உற்பத்தித்திறன் பற்றி காலத்திற்கு காலம் மீளாய்வு மேற்கொண்டு அதன் மூலம் முறைமையை பயனுள்ளவாறு முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதிகள் கணக்காய்வாளருக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் காட்டப்பட்டுள்ள போதும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காக சந்தர்ப்பங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 127 | பொரளை ஆயுள்வேத தேசிய வைத்தியசாலையை போதன வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யும் 02 ஆம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 08 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடத்தின் கீழ்மாடி உள்ளிட்ட 04 மாடிகளில் 183 |

| | | |
|---|---|---|
| | | கட்டில்களைக் கொண்ட 05 சாதாரண வோட்களில் நோயாளர் பராமரிப்பு சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கப்பாட்டுச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 758(1) | வருடாந்த கணிப்பீட்டுக்கு மேலதிகமாக ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் பொருள் பதிவேடுகளை வவுச்சர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து பொருள் பதிவேட்டுப் புத்தகத்தை பரீட்சித்தல் சோதனைக்கு உட்படுத்துவதற்கு, கையிருப்பு மீதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து உண்மையாகவே கையிருப்பில் உள்ள பொருட்கள் சிலவற்றை சரி பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் குறித்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்திய நிதிப் பிரமாணம் 756(6) | கடந்த பல ஆண்டுகள் தொடக்கம் மீளாய்வாண்டு வரை ஆயுள்வேத வைத்தியசாலைக் கையிருப்புக் களஞ்சியம் மற்றும் உப களஞ்சியங்களில் பொருள் பதிவேடுகளில் பட்டியலிடப்பட்ட பொருட்கள் தொடர்பில் வருடாந்த கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| | 2009 டிசம்பர் 16 ஆம் திகதிய 09/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை கடிதம் | அனைத்து அரச நிறுவனங்களிலும் கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தரும் மற்றும் வெளிச் செல்லலை உறுதி செய்தல் தொடர்பான அறிக்கை பேணப்பட வேண்டுமென அறிவுறுத்தல் மற்றும் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போதும் கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் இயந்திரங்களைப் பயன்படுத்தாது வரவுப் பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் 11 ஆயுள்வேத வைத்தியசாலைகளின் 1,614 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக ரூ.94,450,328 செலுத்தப்பட்டது. |

**3.6 முறைசாராத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய வரவு செலவு திட்டத்தின் வரவுசெலவுப் பணிப்பாளர் நாயகத்தின் BD/HRD111/14/2022 ஆம் இலக்க 2023 டிசம்பர் 07ஆம் திகதிய கண்ட்ரோலர் ஜெனரலுக்கு அனுப்பிய கடிதத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அரச அரசாங்க அமைச்சுகள், திணைக்களன்கள், மாகாண சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு இடையில் சொத்துக்களை மாற்றுதல் மற்றும் கையளித்தலின் போது சம்பந்தப்பட்ட சொத்தின் புத்தகப் திருமதி மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையில் வேறுபாடு காணப்படுமாயின் அது சொத்து மாற்றுதல் மற்றும் கையளித்தல் மேற்கொள்ளப்படும் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்ட போதும் அதற்கு மாற்றமாக மதிப்பீடு செய்தல் மற்றும் பணம் அறவிடப்படாமல் ரூ.20,980,575 கிரயமுள்ள 09 உபகரணங்கள் இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2024 ஏப்ரல் 08 ஆம் திகதிய மற்றும் 2379/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் தொடர்ந்தியங்கும் மற்றும் பொது இலட்சினை கொண்ட ஒரு கூட்டுத்தாபனமாக ஆயுள்வேத மருந்து மற்றும் உற்பத்தி ஒழுங்குபடுத்தல் சபை ஒன்று தாபிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு ஒழுங்குபடுத்தல் சபை தாபிக்கப்படவில்லை. இருப்பினும் அதிகார தத்துவம் இன்றி மேற்குறித்த வர்த்தமானியின் 4(உ) பிரகாரம் தாபிக்கப்பட வேண்டிய 04 குழுக்களில் ‘‘ஆயுள்வேத மருந்து தொடர்பான தொழில்நுட்பக் குழு’’ ஆயுள்வேத திணைக்களத்தில் தாபிக்கப்பட்டது. அவ்வாறே இறக்குமதி/ ஏற்றுமதி பணிகளுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர்களில் கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதும் அதற்கு மாற்றமாக இலங்கை ரூபாவில் கட்டணம் அறவிடப்பட்டது.

(இ) ‘‘பாரம்பரிய மருத்துவ அறிவைப் பாதுகாக்கும் கருத்திட்டத்தின்’’ செவிப்புல கட்புலப் பிரிவு செயற்படும் நிலையில் காணப்படாத போதும் மற்றும் அந்த உபகரணங்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட வேண்டிய நிலையில் இருந்தும் அந்த இடத்தில் ரூ.425,000 செலவு செய்து குளிரூட்டி இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டது.

**3.7 குறித்து பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்த்தல்.**
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைப்பாடு உரிய முறையில் இனங்காணப்படாமல் 15 உத்தியோகத்தர்களால் 30 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட முற்பணத் தொகையின் பெறுமதி ரூ.1,249,118 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூ.752,708 முற்பணங்களை செலவு செய்யாது தீர்க்கப்பட்டது. இந்த மீதி பெறப்பட்ட முற்பணத் தொகையில் 32 சதவீதத்திற்கும் 87 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது.

(ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 21/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட,

(i) நிதிப் பிரமாணம் 371(5) பிரகாரம் முற்பணங்கள் வழங்கப்பட்ட பின்னர் உரிய பணி நிறைவு செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் அந்த இடைக்கால முற்பணம் மீண்டும் தீர்க்கப்பட வேண்டிய போதும் 11 உத்தியோகத்தர்கள் 19 சந்தர்ப்பங்களில் பெற்ற முற்பணத்தை தீர்ப்பதற்கு 11 நாட்கள் மற்றும் 44 நாட்களுக்கு இடையிலான காலம் சென்றுள்ளது.

(ii) நிதிப் பிரமாணம் 371(2) பிரகாரம் ஏதேனும் விசேட பணிக்காக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் ஆகக்கூடியது ரூ.100,000 வரை முற்பணம் பெற முடியும் என்பதுடன் அப்பணி நிறைவடைந்ததும் அந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 04 உத்தியோகத்தர்கள் 05 சந்தர்ப்பங்களில் ரூ.181,550 பெறுமதியான முற்பணத்தைப் பெற்றுக்கொண்ட போதும் அதில் எதுவித செலவும் மேற்கொள்ளாது பணத்தை கைவசம் வைத்திருந்து மீண்டும் முழுத் தொகையும் தீர்க்கப்பட்டது.

(இ) 2004 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கு இணக்க கூற்று தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 21.3 ஆம் பிரிவின் பிரகாரம் பணித்தடை செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடைபெறும் ஒழுக்காற்று விசாரணைப் பணிகளை இயலுமான வரை தாமதங்கள் இன்றி பூர்த்தி செய்தல் அத்தியாவசியமாக காணப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டு பணித்தடை செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் ரூ.10,855 மற்றும் 20 ஆண்டுகள் கடந்துள்ள 03 உத்தியோகத்தரடகளிடமிருந்து ரூ.87,610 அறவிடுவதற்கு தவறியுள்ளது.

(ii) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறச் செய்விக்க உள்ள போது அவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய அனைத்து கடன்கள் பற்றிய விபரங்கள் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தரின் பரிமாற்ற ஓய்வூதியம் அல்லது பணிக்கொடையில் இருந்து அறவிடப்படல் வேண்டும். ஆயினும் 2024 டிசம்பர் 31 இல் ஓய்வுபெற்று 02 ஆண்டுகளைக் கடந்துள்ள 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகை ரூ.253,200, மற்றும் 06 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூ.181,160 மற்றும் ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூ.52,050 காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2019 ஜூன் 27 ஆம் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(உ)(ii) பிரகாரம் பதவி வெறிதாகிய போதும் மீண்டும் சேவையில் தாபிக்காத உத்தியோகத்தர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தேர்தல்கள் ஆணையாளர்களுக்குச் சமர்ப்பித்து வதிவிடம் தொடர்பான விபரங்களை வினவி பிரதேச செயலாளர் மூலம் அந்த உத்தியோகத்தர்களின் சொத்துக்கள் தொடர்பான உறுதிப்பாட்டை பெற்றுக் கொண்ட பின்னர் சட்டமா அதிபர் மூலம் கடன் தொகையினை அறவிட வேண்டிக் காணப்பட்ட போதும் 2024 டிசம்பர் 31 இல் சேவை வெறிதாகி 01 தொடக்கம் 03 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்துள்ள 06 உத்தியோகத்தர்களிடம் ரூ.261,176 ரூபாவும் 05 தொடக்கம் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்துள்ள 06 உத்தியோகத்தர்களிடம் ரூ.502,630 ரூபாவும் 20 ஆண்டுகளை கடந்துள்ள 10 உத்தியோகத்தர்களிடம் ரூ.259,480 ரூபாவும் அறவிடப்படவில்லை.

(iv) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின 4.5, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவு மற்றும் 2019 ஜூன் 27 ஆம் திகதிய 05/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03(ஆ) மற்றும் 2017 டிசம்பர் 29 ஆம் திகதிய 262/2017 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் காலஞ்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் காலஞ்சென்று 2024 டிசம்பர் 31 இல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள 09 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் நிலுவை ரூ.616,040 ஆக காணப்பட்டது. அக் கடன் நிலுவைகளில் ரூ.112,250 ரூபா 20 ஆண்டுகளுக்கு முன்னர் காலஞ்சென்ற இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் ரூ.154,200 ரூபா 01 தொடக்கம் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்கு முன்னர் காலஞ்சென்ற இரண்டு உத்தியோகத்தர்கள் மற்றும் ரூ.2,500 ரூபா 06 மாதங்கள் கடந்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பான கடன் மீதியாக காணப்பட்டது.

(v) 05/2019 ஆம் இலக்க மற்றும் 2019 ஜூன் 27 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ''பீ'' கணக்கின் கீழ் இடமாற்றம் பெற்றுச் செல்லும் / இடமாற்றம் பெற்று வரும் உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகள், கடன் தொகைகளைச் செலுத்தி முடிப்பதற்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ள மற்றும் காலஞ்சென்ற ஊழியர்களின் கடன் நிலுவைகள், கடன் தொகைகளைச் செலுத்தி முடிப்பதற்கு முன்னர் விடுவிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்பான கடன் நிலுவைகள் மற்றும் காலம் கடந்த கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு மற்றுமு் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.8 வைப்புக்கள்

மூன்றாம் தரப்புகளுக்கு மீள் செலுத்துவதற்கு உட்பட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட தனிநபர் நிலுவைப் பட்டியல் வைப்புச் செய்பவரின் / நிறுவனத்தின் பெயரை இனங்காணக் கூடியவாறு பேணப்படாத 26 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூ.1,488,160 ஆக காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயுள்வேத சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை முன்னோடிக் கருத்திட்டமாக அனுராதபுரம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் சாதனையின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டு முதல் ஏனைய மாவட்டங்களுக்கு சேவையை விரிவாக்கப்பட வேண்டிய போதும் அனுராதபுரம் பல மாவட்டத்தில் மாத்திரம் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக் கருத்திட்டத்திற்காக 2005 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 877.2 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. ஆனாலும் 2022 ஆம் ஆண்டு முதல் புறம்பாக அக்கருத்திட்டத்திற்காக ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாது அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நோயாளர்

சிகிச்சை சேவைக் கருத்திட்டத்தின் கீழ் சம்பளம், கொடுப்பனவுகள், ஒப்பந்த சேவைகள் உள்ளிட்ட மீண்டெழும் செலவுகளுக்காக மாத்திரம் ஒதுக்கீடுகளை மேற்கொண்டு மீளாய்வு ஆண்டில் 205 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக 173.7 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் ஏனைய மாவட்டங்களையும் உள்ளடக்கி விரிவுபடுத்துவதற்குப் போதுமானவாறு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படாத இக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய மீண்டெழும் செலவுகளை மாத்திரம் திணைக்களத்தின் செலவு விடயம் மூலம் உள்ளடக்கி ஆயுள்வேத சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் கருத்து முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் ஒரு விடயமாகும்.

(ஆ) ஆயுள்வேத திணைக்களம் மற்றும் அதன் இணை நிறுவனங்கள், வைத்தியசாலைகள், வைத்திய நிலையங்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த நிறுவன முறைமை உள்ளடங்கும் வகையில் முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றை (MIS) தயாரிப்பதற்காக 2021 ஆம் ஆண்டு போன்றே 2022 ஆம் ஆண்டும் 25 மில்லியன் ரூபாய் வீதம் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அந்தப் பணிகள் மீளாய்வாண்டிலும் நிறைவேற்றப்படவில்லை.

(இ) ஆயுள்வேத திணைக்களத்தின் மீளாய்வு ஆண்டின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் மூலம் உடல் ஆராக்கிய மத்திய நிலையங்களை நடைமுறைப்படுத்தும் கருத்திட்டத்திற்காக 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டை மேற்கொண்ட போதும் அப்பணி நிறைவேற்றப்படவில்லை.

(ஈ) மீளாய்வு ஆண்டில் சுதேச மருத்துவ முறைகள் பற்றிய தேசிய நிறுவகத்தின் விடுதி வசதிகளை அபிவிருத்தி செய்தல், கேட்போர் கூடம், செய்முறை பரிசோதனைக் கூடம் அபிவிருத்தி செய்தல், நூல் நிலையம் மற்றும் கட்டடத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகளுக்காக 04 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்ட போதும் 4.68 மில்லியன் ரூபாய் செலவு செய்து நிறுவனத்தின் விடுதி வசதிகள் அபிவிருத்தி செய்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டது.

### 4.1.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார திணைக்களத்தின் நோக்கங்கள் அல்லாத ஒரு பணியான தலைக்கு எண்ணெய் தடவும் அரச விழாவுக்காக ஆயுள்வேத திணைக்கத்தால் ரூ.4,910,611 செலவு செய்யப்பட்டது.

### 4.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய மற்றும் 02/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த பெறுகைத் திட்டம் நடைமுறை ஆண்டின் டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதும் மீளாய்வு ஆண்டில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) வருடாந்த பெறுகை திட்டம் மற்றும் திருத்திய பெறுகைத் திட்டம் ஆகியவற்றுக்கு பிரதம கணக்கிட்டு உத்தியோகத்தரின் அனுமதி பெறப்படவில்லை.

(இ) 2024 வருடாந்த பெறுகைத் திட்டத்தில் தேசிய போட்டித்தன்மை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் அலுவலக தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் உரிய அனுமதி பெறப்படாமல் சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இங்கு,

(i) அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1(v) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமல் தொழில்நுட்ப விவரக்குறிப்புக்களுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட இரண்டு விலை மனுதாரர்களிடம் ரூ.3,174,200 ரூபாய் குறைந்தபட்ச விலைமனுக்களை சமர்ப்பித்த நிறுவனத்திடம் முடிவுப்பொருள் காணப்படவில்லை என தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் இந்த விலைமனு நிராகரிக்கப்பட்டது.

(ii) தொழில்நுட்ப விவரக்குறிப்பின் பிரகாரம் அனைத்து பொருட்களுக்காகவும் 03 ஆண்டுகள் உத்தரவாதக் காலம் தேவை என குறிப்பிடப்பட்ட போதும் ஓராண்டு காலம் மற்றும் 02 ஆண்டுகள் உத்தரவாத காலத்துடன் 02 நிறுவனங்களிடம் ரூ.6,062,494 பெறுமதியான அலுவலக தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(iii)தொழில்நுட்ப விவரக்குறிப்பின் பிரகாரம் 03 ஆண்டுகள் உத்தரவாத காலம் காணப்பட வேண்டிய போதும் ஓராண்டு உத்தரவாத காலத்துடன் மற்றும் விலைமனு ஆவணங்களின் பிரகாரம் இரும்பு 0.8 – 0.7 மி.மீ.தடிப்பமுடைய Workmen வழங்கப்பட வேண்டிய போதும் அவற்றை வழங்கும் போது 0.6 மி.மீ தடிப்பமுடைய இரும்பு Workmen வழங்கப்பட்டது.

(ஈ) அரச பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு முரணாக விலைமனு கோராமல் கட்டிட திணைக்களத்துக்கு நேரடியாக ஆயுள்வேத திணைக்களத்தின் அலுவலக கட்டிட கூரை பழுதுபார்ப்பதற்கு வழங்கப்பட்டது. இந்த பழுதுபார்ப்பு பணிக்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ரூ.44,900,000 ரூபா ஒதுக்கீட்டினை கட்டிட திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்தது. இங்கு,

(i) சட்டரீதியான ஒப்பந்தம் இன்றி 44.9 மில்லியன் ரூபா பெறுமதியான மேற்குறித்த பணி கட்டிட திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

(ii) கட்டிட திணைக்களம் மூலம் மேற்குறித்த பணியினை மேற்கொள்வதற்கு உப ஒப்பந்தம் வழங்கிய போதும் அது தொடர்பான ஒப்பந்தத்தின் பிரதி ஆயுள்வேத திணைக்களத்திடம் காணப்படாத காரணத்தால் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள், பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி, கால தாமதத்திற்காக அறவீடு செய்தல், நட்டயீடு தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii)ஏற்புடைய வளாகத்தில் பொருட்களின் பாதுகாப்பினை உறுதி செய்து கூரை திருத்தப் பணிகளுக்காக கட்டிட திணைக்களத்தின் உப ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு செய்யாத காரணத்தால் மழைநீர் ஒழுகியதன் காரணமாக ரூ.1,124,708 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. உப ஒப்பந்தக் கம்பனி இந்த நட்டத்தினை செலுத்தாத காரணத்தால் நிதிப் பிரமாணம் 104(2) “அ” பிரகாரம் சட்ட ரீதியான ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை

எடுக்காத மற்றும் ஏற்புடைய பொருட்களின் பாதுகாப்பை உறுதி செய்யாத அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்து அபராதம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) அரச பெறுகை வழிகாட்டுதலுக்கு முரணாக விலைமனு கோராமல் ஆயுள்வேத திணைக்களத்தால் இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திடம் மாத்திரம் மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவது அவதானிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வு ஆண்டில் மாத்திரம் முறையே ரூ.53,731,570 ரூபா மற்றும் ரூ.126,583,034 ரூபா பெறுமதியான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டன. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டில் கொள்வனவுக் கிரயம் 136 சதவீதம் உயர்வடைந்துள்ளது.

## 4.3 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைப்பாட்டை சரிவர இனம் காணாது திணைக்களத்தின் பிரதான அலுவலக களஞ்சியம் மூலம் கொள்வனவு செய்தமை காரணமாக இரசாயனப் பொருட்கள், பொலித்தீன், உலர் மருந்துப் பொருட்கள் ஆகிய 05 விடயங்கள் தொடர்பில் 217 லீற்றர், 07 விடயங்கள் தொடர்பான 5,043 அலகுகள் மற்றும் 18 விடயங்கள் தொடர்பில் 312 கிலோகிராம் மற்றும் 44 விடயங்கள் தொடர்பில் 13,598 புத்தகங்களின் கையிருப்புக்கள் அசையாத மற்றும் மிகவும் மெதுவாக அசையக் கூடிய நிலைமையில் காணப்பட்டன.

(ஆ) முறையான விநியோக கட்டளை வழங்கப்படாது வாய்மொழி அறிவுறுத்தல் பிரகாரம் களஞ்சியப் பொறுப்பாளரால் 2019 ஆம் ஆண்டு முதல் 2024 யூன் 20 வரையான காலத்திற்குள் புத்தக களஞ்சியத்தில் இருந்து 27 சந்தர்ப்பங்களில் 4,252 புத்தகங்கள் வழங்கப்பட்டது.

(இ) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகம் மூலம் 2015 ஆம் ஆண்டு ரூ.23,557,179 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 38 வகையான செவிப்புல கட்புல உபகரணங்கள் தொடர்பில் 97 அலரகுகள் பயன்படுத்தப்படாதுள்ளன.

(ஈ) ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகள், போதனா வைத்தியசாலைகள், சுற்றுலா இல்லங்கள் மற்றும் மூலிகை தோட்டங்கள் மூலம் சரியாக கையிருப்பு ஏடுகள்/ ஆவணங்கள்/ பொருள் பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படவில்லை என்பதுடன் அன்பளிப்புக்கள் பற்றிய தகவல்களை பிரதான அலுவலகத்துக்கு அறிக்கையிடாமை காரணமாக பிரதான அலுவலகத்தின் நிலையான சொத்துக்கள் பற்றிய ஆவணத்தை இற்றைப்படுத்தி பேணுவதற்கு முடியாதிருந்தது.

(உ) நாவின்ன பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகம், கம்பஹ விக்ரமாரச்சி ஆயுள்வேத போதனா வைத்தியசாலை மற்றும் பல்லேகெலே ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் சேவைகள் ஆகிய மூலிகைத் தோட்டங்களில் மிகவும் பெறுமதியான தாவரங்கள் மற்றும் அரிதான மூலிகைத் தாவரங்கள் முறையே 49, 05 மற்றும் 05 உரிய முறையில் அனுமதி பெறப்படாமல் வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

### 4.4 அரச உத்தியோகத்தர்கள் பிணை நிற்றல்

நிதிப் பிரமாணம் 892 இன் பிரகாரம் பிணை நிற்க வேண்டிய உத்தியோகத்தர்களின் திருத்தப்பட்ட அறிக்கை ஒவ்வொரு 03 ஆண்டுகள் இறுதிக்குப் பின்னர் வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்புடைய அமைச்சின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த அறிக்கையுடன் மேலும் பிணை நிற்பதற்குத் தேவையற்ற உத்தியோகத்தர்களின் பெயர்கள் உள்ளடங்கிய விவரமான அறிக்கையொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அவ்வாறு செயற்படவில்லை.

### 4.5 நிதி முறைகேடுகள் வடிவமுடைய கொடுக்கல் வாங்கல்

"AyurEx Colomo 2023" எனும் பெயரில் சுதேச மருத்துவ முறைகள் பற்றிய சர்வதேச மாநாடு மற்றும் கல்விக் கண்காட்சிக்காக அரசியலமைப்பின் 148,149(1) உறுப்புரைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் 132,170(2) பிரகாரம் நடவடிக்கை எடுக்காது ஆயுள்வேத ஆணையாளரின் பதவிப் பெயரைப் பயன்படுத்தி வெளிவாரி நபர்களிடம் அன்பளிப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு கடிதம் அனுப்பி நலன்புரி சங்கத்தீன் வங்கிக் கணக்கிற்கு பணம் வைப்பிலிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இங்கு பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் இருந்து ரூ.28,469,950 தெகையை சேகரித்து அந்த தொகையை திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தின் கணக்கில் செலவு வைத்து அத்தொகையில் ரூ.28,326,935 செலவு செய்யப்பட்டது.

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விலைமனுக்கள் கோரப்படாமல் நலன்புரிச் சங்கத்தின் மூலம் ஆயுள்வேத ஆணையாளரின் யோசனைக்கு அமைவாக ரூ.28,945,285 செலவு செய்து கண்காட்சியை முகாமை செய்வதற்காக கண்டி பிலிமத்தலாவ பிரதேசத்தின் தனியார் கம்பனி ஒன்று நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட போது நலன்புரிச் சங்கத்தின் கணக்கில் ரூ.836,948 மாத்திரம் காணப்படல் சர்ச்சையை தோற்றுவிக்கும் ஒரு விடயமாகும்.

(இ) நிகழ்ச்சி முகாமைத்துவ நிறுவனத்திற்கு காசோலை மூலம் நேரடியாக பணம் அனுப்ப முடிந்த போதும் 03 சந்தர்ப்பங்களில் ஆயுள்வேத ஆணையாளர் நாயகத்தின் வாய்மொழி மற்றும் எழுத்துமூல அறிவுறுத்தல் பிரகாரம் ரூ.10,881,642 வங்கியிலிருந்து பணம் பெற்று சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டது.

(ஈ) நலன்புரிச் சங்கத்தினால் ரூ.1,820,430 உண்மையாகவே செலவு செய்துள்ளமையை உறுதி செய்வதற்கான ஆவணங்கள் எதனையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு முடியவில்லை.

(உ) 2023 செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி இந்த கண்காட்சி நடாத்தி முடிக்கப்பட்ட போதும் 2023 டிசம்பர் 01 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் ரூ.110,000 நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது.

(ஊ) 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி ரூ.422,000, 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி ரூ.474,000, 2024 மே மாதம் 05 ஆம் திகதி ரூ.11,000 என மொத்தம் ரூ.907,000 வெளிநபர்களால் நலன்புரிச் சங்கத்தின் நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளதாக நலன்புரிச் சங்கத்தின் காசுப் புத்தகத்தின் பிரகாரம வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பான தகவல்கள் நலன்புரிச் சங்கத்திடம் காணப்படவில்லை என்பதுடன் ஆயுள்வேத ஆணையாளரின் வாய்மொழி மூல

அறிவுறுத்தல் பிரகாரம் 2024 ஏப்ரல் 24 ஆம் திகதி மற்றும் 2024 மே 02 ஆம் திகதி ரொக்க காசோலை மூலம் நபர் ஒருவருக்கு ரூ.896,000 செலுத்தப்பட்டதுடன் அந்த கொடுப்பனவுடன் தொடர்புடைய தகவல்கள் நலன்புரிச் சங்கத்திடம் காணப்படவில்லை. ஆகவே, ஆணையாளர் நாயகத்தால் நலன்புரிச் சங்கத்திற்கு உரித்தாகாத பணிகளுக்காக முறைசாராத விதமாக பணம் சேகரிப்பதற்கு மற்றும் செலவு செய்வதற்கு இந்த நலன்புரிச் சங்கத்தின் கணக்கு பயன்படுத்தப்பட்டது.

## 4.6 முகாமைத்துவ குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்துக்குச் சொந்தமாக 190 ஹெக்டயார்களில் 07 ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க சேவை மூலிகைத் தோட்டங்கள் காணப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டில் 03 மூலிகைத் தோட்டங்களில் இருந்து எந்தவித மருந்து மூலப்பொருட்களும் பெறப்படவில்லை என்பதுடன் 04 மூலிகைத் தோட்டங்களில் இருந்து 906.4 கிலோகிராம் மூலப்பொருட்கள் பெறப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் 04 ஆயுள்வேத போதனா வைத்தியசாலைகள் மற்றும் 07 ஆராய்ச்சி வைத்தியசாலைகளில் இருந்து 252.892 லீற்றர் மருந்து உற்பத்திகள் மற்றும் 11,846 கிலோகிராம் மருந்துகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டன. ஆகவே மருந்து உற்பத்தி மற்றும் மூலிகைத் தோட்டங்கள் மூலம் மருந்துகள் வழங்குதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) ஆயுள்வேத திணைக்களத்துக்குச் சொந்தமாக ரூ.422,00 பெறுமதியான 19 கைவிரல் அடையாள இயந்திரங்கள் காணப்பட்ட போதும் அவற்றுள் 14 இயந்திரங்கள் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் 03 இயந்திரங்கள் செயற்படாத நிலையில் காணப்பட்டன.

(இ) பொரளை தேசிய ஆயுள்வேத வைத்தியசாலையின் 05 ஆம் மாடியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் நிர்வாகிக்கப்படும் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் 2017 ஜூன் 02 ஆம் திகதி முதல் தாபிக்கப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டிலும் அதற்கான முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மாதாந்த வாடகையும் அறிவிடப்படாது காணப்பட்டது.

(ஈ) பொரளை ஆயுள்வேத தேசிய வைத்தியசாலை வளாகத்தின் பல இடங்களில் அச்சிடப்பட்ட மாதிரிப் படிவங்கள் பாதுகாப்பற்ற மற்றும் முறையற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் கையிருப்பு ஆவணம் பேணப்படவில்லை. பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாது இந்த மாதிரிப் படிவங்கள் அவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் காணப்படல் காரணமாக கரையான் போன்ற பூச்சிகள் மற்றும் தூசி படிவதன் காரணமாக சேதமடைந்து காணப்பட்ட போதும் மீளாய்வு ஆண்டிலும் அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) அம்பாறை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை மற்றும் நாளாந்த வதிவிட நோயாளர்களின் எண்ணிக்கை ஆகக்கூடியது 02 பேராக காணப்பட்ட போதும் சேவையின் தேவைக்கு மேலதிகமாக 10 பராமரிப்பாளர்கள் மற்றும் 21 ஆயுள்வேத சேவை உதவியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவதனால் சமைத்த உணவுக்காக 2023 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வு ஆண்டில் மாத்திரம் முறையே ரூ.1,712,098 மற்றும் ரூ.1,389,029 செலவிடப்பட்டது. அவ்வாறே மேலதிக நேரக் கொடுப்பனவுக்கான செலவு 2023 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வு ஆண்டில் மாத்திரம் முறையே ரூ.2,749,240 மற்றும் ரூ.3,288,535 ரூபாவாக காணப்பட்டது.

(ஊ) நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ரூ.613,832,500 பெறுமதியான 07 காணிகள் மற்றும் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படும் 52,7958 ஹெக்டயார்கள் கொண்ட 08 காணிகளின் உரிமையை கையேப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(எ) நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ரூ.431,585,212 பெறுமதியான கட்டடங்கள் அமைந்துள்ள 09 காணிகளின் உரிமையை திணைக்களத்துக்கு கையேப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஏ) அனுராதபுரம் சமூக சுகாதார மேம்பாட்டுக் கருத்திட்டத்தின் பயன்பாட்டுக்காக சுதேச மருத்துவ அமைச்சு வழங்கிய ஓட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ள 20 மோட்டார் சைக்கிள்களைப் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது மீண்டும் அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**5. பேண்தகு அபிவிருத்தி**

2017 ஆம் ஆண்டின் 19 இலக்க நிலையான அபிவிருத்திச் சட்டத்தின் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதன் வளங்களை செயற்திறனுடன் வழிநாடாத்தல் வேண்டும் என்பதுடன் நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனம் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகள், முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்குப் பொருத்தமான குறிகாட்டி இனம் காணப்படல் வேண்டும். ஆனாலும் திணைக்களத்தால் அவ்வாறான ஒரு குறிகாட்டியை இனம் கண்டு நோக்கங்களை அடைந்து கொண்ட அளவு மற்றும் விலகுதல் போன்றே அவதானம் செலுத்தப்பட வேண்டிய பல்வேறு துறைகள் இனம் காணப்படவில்லை.

**6. நல்லாட்சி**

**6.1 பொதுமக்களுக்கு சேவை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீலாய்வு ஆண்டில் மன்சன்தொடுவாய், மதவாச்சி, அம்பாறை, ஹம்பாந்தோட்டை மற்றும் நாவின்ன ஆகிய 05 ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற நாளாந்த நோயாளர்கள் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் அந்த 05 வைத்தியசாலைகளின் 12 வோட்களில் சுமார் 246 கட்டில்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஆ) மீளாய்வு ஆண்டில் பொரளை ஆயுள்வேத தேசிய வைத்தியசாலையின் எட்டு மாடிக் கட்டிடத்தில் 288 சாதாரண வோட் கட்டில்களின் கொள்ளளவில் 120 120 அல்லது 42 சதவீதமும் வைத்தியசாலையின் பழைய சாதாரண வோட்களின் 274 கட்டில்களில் 76 கட்டில்கள் அல்லது 28 சதவீதமும் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டதாகவும் புதிய கட்டிடத்தின் புதிய அறை வசதிகளுடன் கூடிய 88 கட்டில் கொள்ளளவுடைய கட்டணம் செலுத்தும் அனைத்து வோட்கள் மற்றும் பழைய கட்டணம் செலுத்தும் 32 வோட்டுகளில் 08 ஓவோட்கள் குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டதன் காரணமாக நோயாளர் பராமரிப்பு சேவைகள் உரியவாறு நிறைவேற்றப்படவில்லை.

(இ) பாரம்பரிய மருத்துவ முறைகள், தொற்றா நோய்த் தடுப்பு, யுனானி ஆயுள்வேதம், சிறுநீரக நோய், ஆயுள்வேத இலக்கியம், ஆயுள்வேத கோட்பாடுகள், ஆயுள்வேத சிகிச்சை மற்றும் ஆயுள்வேத மருந்துகள்

தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 07 ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகள் தாபிக்கப்பட்ட போதும் நாவின்ன ஆயுள்வேத ஆராய்ச்சி நிர்வகம் தவிர்ந்த அனைத்து ஆராய்ச்சி வைத்தியசாலைகளிலும் ஆயுள்வேத ஆராய்ச்சி அறிக்கைகள், வெளியீடுகள் அல்லது புதிய மருந்துகள் அறிமுகம் செய்யப்படவில்லை.

## 7. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்திற்காக முகாமைத்துவ தரவு முறைமை ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதும் மீளாய்வாண்டில் ஏற்புடைய தரவு முறைமை தாபிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் திணைக்களம் மற்றும் அதன் இணை நிறுவனங்கள், வைத்தியசாலைகள், வைத்திய நிலையங்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த நிறுவன முறைமை தொடர்பாகவும் இற்றைப்படுத்தப்பட்ட முகாமைத்துவ தகவல்களை செயற்திறனுடன் பெற்றுக் கொள்வதற்கு முடியாது என்பதுடன் திணைக்களத்தின் பணியாட்டொகுதியினரின் வருகை மற்றும் வெளிச் செல்லல் ஆகியவற்றை பதிவு செய்வதற்கான நிர்வாகம், செயலாற்றுகை நிர்வாகம், சம்பள நிர்வாகம், மேலதிகநேர செலவு நிர்வாகம், தனிநபர் கடிதக்கோப்பு நிர்வாகம் போன்றவற்றின் நிர்வாகம் பலவீனமான நிலையில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2023 டிசம்பர் 31 இல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி 2,393 ஆக காணப்பட்ட போதும் அத்திகதியில் உண்மையான பணியாட்டொகுதி 1,614 ஆக காணப்பட்டமையால் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் 30 சதவீதத்திற்குச் சமமான 725 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் இந்த வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலை வெற்றிடங்கள் 132, மூன்றாம் நிலை வெற்றிடங்கள் 35, இரண்டாம் நிலை வெற்றிடங்கள் 322 மற்றும் ஆரம்ப நிலை வெற்றிடங்கள் 236 காணப்படுகின்றமை காரணமாக திணைக்களம் மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலைகளின் செயலாற்றுகைக்கு பாரியளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(இ) 06 ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகளுக்காக ஆராய்ச்சி பணியாட்டொகுதி அங்கீகரிக்கப்பட்டதுடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆராய்ச்சி நிறுவகத்திற்காக ஒவ்வொரு விடயத் துறை தொடர்பாகவும் 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 12 ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட போதும் அதில் எந்தவொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) மைத்ரிபால சேனாநாயக்க ஞாபகார்த்த பாரம்பரிய ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியவசாலையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியை விடவும் சேவைத் தேவைப்பாடு இன்றி டிக்கட் எழுதுவிளைஞர் ஒருவர் மற்றும் மருந்து கலப்பாளர் ஒருவர் இணைப்புச் செய்யப்பட்டதுடன் நாள் ஒன்றுக்கு வருகை தரும் சராசரி நோயாளர்கள் 10 பேராக காணப்பட்ட போதும் மூன்று வைத்தியர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

(உ) நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையில் மருந்தாளர் பதவி வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் வெற்றிடமாக உள்ளது.

**பீ.ஜீ.தர்ஷன**
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் தலைமையதிபதிக்காக
பத்தரமுல்ல

## 04. அத்தியாயம் -

## 4. செயலாற்றுகைக் குறிகாட்டி

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டி (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| இல. | விசேட குறிகாட்டி | எதிர்பார்த்த வெளயீடுகளின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | 100%- 90% | 75%- 89% | 50%- 74% |
| 1 | சுதேச/ ஆயுள்வேத மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகள் மூலம் பொதுமக்களுக்கு தரமான சேவைகளை வழங்குதல். | 95 | - | - |
| 2 | சுதேச/ மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளைப் பாதுகாத்தல் / முறையான ஒழுங்குபடுத்தல் / கல்வி மற்றும் ஆராய்ச்சி மூலம் மேம்படுத்தல் | 98 | - | - |
| 3 | சுதேச மருத்துவத் துறைக்குத் தேவையான மருந்துகளை போதுமான மற்றும் தரமானதாக உற்பத்தி செய்தல் மற்றும் துறையின் மூலம் நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தல் | - | 88 | - |
| 3.1 | பலவீனமான மற்றும் உள்நாட்டு மருத்துவ தாவரப் பாதுகாப்பு மற்றும் விரிவாக்க சேவைகளை மேம்படுத்துதல், வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துல மூலப்பொருட்களை வழங்குதல் | - | 80 | - |
| 3.2 | விரிவாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கு பங்களிப்பு செய்தல் மற்றும் மருத்துவ தாவரங்கள் பற்றி பொதுமக்கள் / சமூகக் குழுக்களுக்கு அறிவூட்டல் | - | 75 | - |

# 5. அத்தியாயம்

## 5. பேண்தகு அபிவிருத்தி நோக்கத்தை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை

### 5.1 இனம் காணப்பட்ட ஏற்புடைய பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள்

| இல. | இலக்கு/ நோக்கம் | இலக்கு | சாதனைக் குறிகாட்டி | இதுவரை சாதனை அடைவு முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| 1 | **ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு** | 1.1 2030 ஆம் ஆண்டளவில் உலகில் தாய் இறப்பு விகிதத்தை 100000 உயிருள்ள பிறப்புக்கு 70 வரை குறைத்தல். | அடையப்பட்டு வருகிறது | | 70 | |
| | | 1.2 அனைத்து நாடுகளிலும் புதிதாக பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதத்தை 1,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 12 ஆகவும், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதத்தை 1,000 உயிருள்ள பிறப்புகளில் குறைந்தது 25 ஆகவும் குறைக்கும் நோக்கத்துடன 2030 ஆம் ஆண்டளவில் புதிதாகப் பிறந்த மற்றும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே தடுக்கக்கூடிய இறப்புக்களை இல்லாதொழித்தல். | அடையப்பட்டு வருகிறது | | 70 | |
| | | 1.3 2030 ஆம் ஆண்டளவில் எயிட்ஸ், காசநோய், மலேரியா உள்ளிட்ட கவனம் செலுத்தப்படாதுள்ள வெப்பமண்டல வலய தொற்றுநோய், ஹெபடைடிஸ், நீர் மூலம் பரவும் நோய்கள் மற்றும் பிற தொற்று நோய்களை இல்லாதொழித்தல் | அடையப்பட்டு வருகிறது | | | 80 |
| | | 1.4 2030 ஆம் ஆண்டளவில் தொற்றா நோய்கள் காரணமாக நிகழும் அகால மரணங்களை சிகிச்சைகள் மூலம் மற்றும் தடுக்கும் முறைகள் ஊடாக மூன்றில் ஒன்றால் குறைத்தல் மற்றும் உள சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்தல். | அடையப்பட்டு வருகிறது | | | 80 |
| | | 1.5 பாதிப்பு ஏற்படும் விதமான மதுசாரப் பாவனை மற்றும் அபாயகர ஔடதப் பாவனையை தடுக்கும் செயற்பாடுகள் மற்றும் சிகிச்சைகளை பலப்படுத்தல். | அடையப்பட்டு வருகிறது | | | 80 |
| | | 1.6 2030 ஆம் ஆண்டளவில் வீதிகளில் இடம்பெறும் விபத்துக்கள் மூலம் ஏற்படும் காயமடைதல் மற்றும் மரணங்களின் எண்ணிக்கையை குறைத்தல் | அடையப்பட்டு வருகிறது | | 70 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1.7 2030 ஆம் ஆண்டளவில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றிய தகவல்கள் மற்றும் கற்கைகள் உள்ளிட்ட பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார பராமரிப்பு சேவைகளுக்கான அனைவரும் அணுகுவதற்கான சந்தர்ப்பங்களை உறுதி செய்தல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரத்தை தேசிய மூலோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்குதல். | அடையப்பட்டு வருகிறது | | | 80 |
| | | 1.8 நிதி ரீதியான ஆபத்துக்களுக்கு ஆளாவதற்கான பாதுகாப்பு உள்ளிட்ட பாதுகாப்பான, பயனுள்ள, தரத்தில் உயர்வான மற்றும் குறைந்த விலையில் பெற முடியுமான தடுப்பூசிகள் மற்றும் அத்தியாவசிய சுகாதார சேவைகளை அனைவருக்கும் பெற்றுக்கொள்ள முடிதல் உள்ளிட்ட நம்பகரமான தரத்தில் சுகாதார வசதிகளைப் பெற முடிதல். | அடையப்பட்டு வருகிறது | - | - | - |
| | | 1.9 2030 ஆம் ஆண்டளவில் பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயனம், காற்று, நீர் மற்றும் மண் மாசடைதல், அசுத்தமடைதல் காரணமாக ஏற்படும் இறப்புகள் மற்றும் நோய் நிலைமைகளை குறிப்பிடத்தக்க அளவு குறைத்தல். | அடையப்பட்டு வருகிறது | 40 | | |
| 02 | **சுனிசி பணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி** | 2.1 தேசிய நிலைமைகளுக்கு ஏற்ப தனிநபர் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துதல் மற்றும் குறிப்பாக குறைந்த பட்சம் வளர்ச்சியடைந்த நாடுகள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 7% மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சியை பேணிச் செல்லல். | அடையப்பட்டு வருகிறது | | 65 | |
| 02 | | 2.2 பல்வகைப்படுத்தல், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புத்தாக்கம் மற்றும் அதிக பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் உழைப்புக்கு கூடுதல் கேள்வி நிலவும் துறைகளில் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் அதிக அளவிலான பொருளாதார உற்பத்தியை அடைதல். | அடையப்பட்டு வருகிறது | | | 80 |
| | | 2.3 பயனுள்ள செயற்பாடுகள், நிலையான வேலை வாய்ப்புகள், தொழில்முனைவு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றுக்கு உதவும் அபிவிருத்தி சார்ந்த கொள்கைத் திசையமைவு கொண்ட கொள்கைகளை மேம்படுத்தல். நிதிச் சேவைகளுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளை தாபித்தல் மற்றும் ஊக்குவித்துதல். | அடையப்பட்டு வருகிறது | | | 75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2.4 2030 ஆம் ஆண்டளவில் நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான பத்தாண்டு வேலைததிட்டத்தின் பிரகாரம் உலக உற்பத்தி மற்றும் நுகர்வின் போது வளப் பயன்பாட்டை செயற்திறனாக்குதல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் போது சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனை முற்போக்கான விதத்தில் அவிருத்தி செய்தல். இதன் போது அபிவிருத்தியடைந்த நாடுகள் முன்னிலை வகிக்கும். | அடையப்பட்டு வருகிறது | | | 80 |
| | | 2.5 2030 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கான பயனுள்ள மற்றும் நிலையான தொழில் வாய்ப்புக்களை வழங்குதல். | அடையப்பட்டு வருகிறது | | 65 | |
| | | 2.6 2030 ஆம் ஆண்டளவில் கல்வி கற்காத, பயிற்சி பெறாத வேலையற்ற இளைஞர்களின் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்தல் | அடையப்பட்டு வருகிறது | | 60 | |
| | | 2.7 பலவந்தமாக உழைப்பினைப் பெற்றுக் கொள்வதனை இல்லாதொழிப்பதற்காக உடனடியாக பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பெண்களை அடிமையாக நடாத்தி சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் மானுட நிறைவுக்கு கொண்டுவரல் மற்றும் சிறுவர் போராளழிகளாக ஆட்சேர்த்தல் உள்ளிட்ட மிகவும் தீய விதமாக சிறுவர் உழைப்பினை பயன்படுத்துதலைச் தடை செய்தல் மற்றும் இல்லாதொழித்தல், 2025 ஆம் ஆண்டளவில் அனைத்து விதமான சிறுவர்களை உழைப்பை பெற்றுக்கொள்ளலை முடிவுக்கு கொண்டு வரல். | அடையப்பட்டு வருகிறது | 50 | | |
| | | 2.8 தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல், விசேடமாக புலம்பெயர் பெண்கள் உள்ளிட்ட புலம்பெயர்ந்தோர் மற்றும் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுவோர் உள்ளிட்ட வேலை செய்யும் அனைவருக்காகவும் பாதுகாப்பான மற்றும் அவதானத்துடன் கூடிய சேவை நிலையங்கள் கொண்ட சூழலை மேம்படுத்தல். | அடையப்பட்டு வருகிறது | | 70 | |
| | | 2.9 20230 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு கலாச்சாரம், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்புக்களை மேம்படுத்தும் நிலையான சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான கொள்கைகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல். | அடையப்பட்டு வருகிறது | | | 80 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2.10 அனைவருக்கும் வங்கி வசதிகள், காப்புறுதி மற்றும் நிதிச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அணுக முடியுமானவ விதத்தில் உள்நாட்டு நிதி நிறுவனங்களின் இயலளவுகளை பலப்படுத்தல். | - | - | - | - |

## 5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் சாதனைகள் மற்றும் சவால்கள்

**சாதனைகள்**

1 ஆயுள்வேத திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்புக்களை மறுசீரமைத்தல்.

**சவால்கள்**

1 தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான காரணிகளின் தாக்கம்

2 மாற்றுவழி மருத்துவ முறைகளுடன் நடவடிக்கை மேற்கொள்ளும் போது ஏற்படும் பல்வேறு தடைகள்

3 வளப் பற்றாக்குறை மற்றும் தரவு சேகரிப்பதில் உள்ள குறைபாடுகள்.

4 மனித வள மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை.

# 6. அத்தியாயம்.

## 6. மனிதவள விவரம்

## 6.1 பணியாட்டொகுதி முகாமைத்துவம்

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 735 | 549 | 132 |
| மூன்றாம் நிலை | 38 | 3 | 35 |
| இரண்டாம் நிலை | 580 | 258 | 322 |

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப நிலை | 1040 | 804 | 236 |

**6.2 மனித வள அபிவிருத்தி**

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | நடாத்திய நிறுவனம் | கலந்து கொண்ட அலுவலர்கள் | நிகழ்ச்சித் திட்டத்தின் காலஎல்லை | பாடநெறிக் கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1 | லீவு இலிகிதர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்பும் | Skill Development Fund Ltd | 2 | 2024.02.29 மற்றும் 2024.03.01 | 26,000.00 |
| 2 | தமிழ் மொழித் தேர்ச்சி – 150 மணித்தியாலம் | ஆயுள்வேத திணைக்களம் | 35 | 2024.03.12 – 2024.07.11 | 112,500.00 |
| 3 | Workshop on Advance Excel - 2024 | இலங்கை மன்றக் கல்லூரி | 8 | 2024.09.27 மற்றும் 28 | 132,000.00 |
| 4 | Development of Supervisors | தேசிய தொழிற் கல்வி நிறுவகம் | 2 | 2024.10.30 | 10,000.00 |
| 5 | Leadership Development | தேசிய தொழிற் கல்வி நிறுவகம் | 7 | 2024.10.24 | 35,000.00 |
| 6 | அலுவலக குறிப்பு எழுதுதல் மற்றும் கடமைசார் கடிதம் வரைதல் | தேசிய தொழிற் கல்வி நிறுவகம் | 4 | 2024.10.29 | 20,000.00 |

# 7 அத்தியாயம்

## 7. இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | ஏற்புடையதன்று | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதன்று | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | ஏற்புடையதன்று | | |
| 1.6 | ஏனைய | ஏற்புடையதன்று | | |
| **2** | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு lவினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை இற்றைப்படுத்தி பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA—N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **3** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காய்வாளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை | இணக்கமானது | | |
| **4** | **வருடாந்த திட்டத்தினை தயாரித்தல** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NDB) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் காய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரியது திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| **5** | கணக்காய்வு ஐய வினாக்கள் | | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1 – 2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | இணக்கமானது | | |
| 6.3 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் 40 (4) இன் அடிப்படையில் அனைத்து உள்ள கணக்காய் அறிக்கைகளின் நகல்களையும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல் | இணக்கமானது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| 8 | ஆதன முகாமைத்துவம் | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்கு அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும் | இணக்கமற்றது | பிரயோக சிக்கல் | திணைக்களம் மூலம் மேற்கொள்ளல் |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல் | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| **10** | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கினக்க அறிக்கைகளை தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கினக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரி செய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல் | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல் | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும் | இணக்கமானது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முன்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையில் உள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14** | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி. சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **17** | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் பட்டியல் ஒன்றைப் புதுப்பித்து பேணுதல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல் | இணக்கமானது | | |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது | இணக்கமானது | | |
| **19** | **மனித வள திட்டத்தினை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02 /2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும் | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமற்றது | தற்போதுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களின் பிரகாரம் இப் பணிகளைச் சரிவர நடைமுறைப்படுத்த முடியாது. | எதிர்காலத்தில் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் கிடைப்பனவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்ற தாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | இணக்கமற்ற தினைத் தடுப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ற மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பதில்வினையாற்றல்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல். | இணக்கமானது | | |